ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர



# 144 வருடத்திற்கு ஒரு முறை நிகழும் மஹா கும்பமேளா வருடத்திய, குருபகவான் மிதுன ராசி ப்ரவேச சரஸ்வதி நதி புஷ்கர் அழைப்பிதழ்


## ப்ரயாக்ராஜ், உத்திர பிரதேசம்

### ஸ்ரீ விசுவாவசு வருடம்

**வைகாசி மாதம் 1ஆம் தேதி (15-5-2025) வியாழக்கிழமை முதல்**

**வைகாசி மாதம் 12ஆம் தேதி (26-5-2025) திங்கட்கிழமை வரை**

| சித்தாந்த ஸரளி ஸிக்ரந்தம்<br>ஸ்ரீ ஸ்கந்த புராணம் - ஸ்ரீ நாரத புராணம் | | |
|---|---|---|
| மேக்ஷேச கங்கா,<br>வருபேக்ஷ ரேவா,<br>மிதுனேது சரஸ்வதி,<br>கர்கடே யமுனா ப்ரோக்தா,<br>சிம்மே கோதாவரி ஸ்மிருதா, | கன்யாயாம் கிரிஷ்ணவேனிசா<br>காவேரி தடகே ஸ்மிருதா ;<br>விருச்சிகே தாமிரபரணி சா ;<br>சாபே புஷ்கரவாஹினி,<br>மகரே துங்கபத்ரா, | கும்பே சிந்து நதி ஸ்மிருதா;<br>மீனே பரணீதா நதிசா;<br>குரோ சங்கர மனோஸ்மிருதா<br>புஷ்கராக்சோ முனிநாம் ஹி ப்ரவேசோ உத்ர பூதே ஸ்மிருதாஹ |



ஜகத்குரு ஸ்ரீ
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
ஸ்வாமிகள்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர
சரஸ்வதி ஸ்வாமிகள்

அவர்களின் பரிபூரண
அநுக்ரஹத்துடன்





## ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம்

## ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

## ஆஞ்ஞையின்படி,

## அவர்களின் அநுக்ரஹத்துடன்

## நடைபெறும் புஷ்கரத் திருவிழா.

**பேரன்புடையீர்,**

புஷ்கர விழா நதிகளை போற்றி வணங்கும் ஒரு திருவிழாவாகும். ப்ராசீனமான 12 புனித நதி தீரங்களில் இருக்கும் ஆலயங்களில் இது கொண்டாடப்படுகின்றது. அவ்வமயம் பித்ரு பூஜைகள், ஆன்மீக சொற்பொழிவுகள், பக்தி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தேறும்.





**புஷ்கரத் திருவிழா ஒவ்வொரு வருடமும் குரு பகவான் ஒரு ராசியில் இருந்து இன்னொரு ராசிக்கு இடம்பெயரும் பொழுது அந்தந்த ராசிக்குரிய நதிகளில் நடைபெறும் விழாவாகும். சிருஷ்டியில் இருக்கும் மூன்றைரை கோடி தீர்த்தங்களுக்கும் அதிபதி ப்ரம்மா. அவற்றினுள் ஒரு சில தீர்த்தங்களுக்கு நம் புராணங்கள் புஷ்கர விசேஷத்தை நிர்வகித்துள்ளன.**

**ப்ரம்மவின் கமண்டலத்திலுள்ள புஷ்கரனமான குரு பகவான், குரு பெயர்ச்சி சமயங்களில் அந்தந்த ராசிக்குரிய தீர்த்தங்களில் பன்னிரெண்டு நாட்கள் பிரவேசம் செய்து, வாசம் செய்வதாக ஐதீகம். இந்த புஷ்கர புண்ணிய காலத்தில் மும்மூர்த்திகளும், தேவர்களும், ரிஷிகளும், அந்தந்த தீர்த்தங்களுக்கு வந்து நீராடி மகிழ்வதாகவும் நம்பப்படுகின்றது. எனவே இந்த புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடுவது மூன்றைரை கோடி தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியத்திற்கு நிகரானது.**

**திருக்கணித பஞ்சாங்கத்தின் படி கணித்தது - வருகின்ற *மே* 14, 2025 அன்று நிகழும் (11:20 PM) குரு பெயர்ச்சி ஒவ்வொரு இராசிக்காரர்களுக்கும் நல்கும் நல்லன, அல்லன பயன்கள் & பரிகாரங்களுக்கு பெரியோர்களை கலந்து ஆலோசிக்கவும்.**

144 வருடத்திற்கு ஒரு முறை வரும் கும்ப மேளா "மஹா கும்பமேளா என்று அழைக்கப்படும் இது ஒரு வருடம் முழுவதும் கடைபிடிக்கப்படும். இந்த வருடம் மஹா கும்பமேளா வருடம். இந்த வருடத்தில் வரும் இந்த மிதுன ராசி, சரஸ்வதி நதி புஷ்கர் இவ்வகையில் மிகவும் முக்கியமானதும், புண்ணியமானதும் ஆகும். இந்த 12 நாட்களும் சங்கமத்தில் ஸ்நானம் செய்தால் புஷ்கர ஸ்நானம் மற்றும் மஹா கும்பமேளா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும்.

# ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்கு குருபெயர்ச்சி
# 14.5.2025 (11:20 PM)




புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடி தானம் செய்வது, மற்றைய நாட்களில் செய்யும் தானங்களைவிட பன்மடங்கு புண்ணியத்தை நல்கும். புஷ்கர காலங்களில் வரையறுக்கப்பட்ட நதிகளில் பித்ருக்களுக்கு தர்ப்பணம், திதி கொடுத்து முன்னோர்களை வழிபடுவது பித்ருசாபம் நீங்க வழி நல்கும். கௌரி பூஜை, கங்கை பூஜை, பிரகஸ்பதி பூஜை, தம்பதி பூஜை செய்வதும் வாழ்வில் சகல நன்மைகளும் கிடைக்க வழி வகுக்கும்.

இத்தகைய சமயங்களில் வேத வித்துக்களுக்கும், பண்டிதர்களுக்கும், ஏனையோருக்கும் அளிக்கப்படும் தக்ஷிணை, சமாராதனை, அன்னதானம், வஸ்திரதானம் போன்ற தானங்கள் சிறந்த புண்ணிய பலன்களை அளிப்பதாக கருதப்படுகிறது.

குரு பகவான் *ரிஷப* ராசியில் இருந்து *மிதுன* ராசிக்கு பெயரும் போது *மிதுன* ராசிக்கு உரிய நதியான

**சரஸ்வதி நதியில்**

ஸ்ரீ விசுவாசுவ வருடம்

வைகாசி மாதம் 1ஆம் தேதி (15-5-2025) வியாழக்கிழமை முதல்

வைகாசி மாதம் 12ஆம் தேதி (26-5-2025) திங்கட்கிழமை வரை

குரு பகவான் வாசம் செய்வார்.

குரு பெயர்ச்சி தொடங்கி இந்த 12 நாட்களும் ஆதி புஷ்கரம் சரஸ்வதி நதி அந்தர்வாஹினியாக மிளிரும் பிரயாகையில் கொண்டாடப்படுகின்றது.

# சரஸ்வதி நதி மஹாத்மியம்



பூமியின் ஜனனத்திற்குப் பின் தேவர்கள் பூமிக்கு ஒவ்வொரு சக்தியையும் அனுப்ப யத்தனித்தார்கள். நிலமும், நீரும் கொண்டு சேர்த்த பின்னர், அக்னியை அனுப்புகையில், அக்னியை எவ்விதம் பூமிக்கு கொண்டு செல்வது; யார் அதை பொறுப்பாக செய்து முடிக்க இயலும் என ஆலோசித்தார்கள். ப்ரஹ்மாவிடம் பிரார்த்தித்தார்கள்.

அவருடைய ஆலோசனையின்படி அவருடைய பத்தினியான சரஸ்வதியிடம் வேண்டிநின்ற பொழுது, அவளும், இவ்வரிய செயலை தானே செய்துமுடிப்பதாக வாக்களித்தாள். தன் சக்தியை திரட்டி சரஸ்வதி நதியாக பிரவகித்தாள் - அக்னியை தாங்கி பூலோகம் வரைக்கும் கொண்டு செல்ல குளிர் நீரால்தானே இயலும்?

ப்ரஹ்ம லோகத்திலிருந்து, தாது அக்னியை சுமந்தவாறு, வியாசமுனி தவமியற்றும் வியாச குபா மலைப் பிரதேசத்தில் வந்து இறங்கினாள். ஈரேழு அண்டங்களைத் தாண்டி அக்னியை தோளில் சுமந்துவந்த களைப்பும், தேகக் கொதிப்பும், செயற்கரியது செய்துமுடித்த சந்தோஷ ஆர்பரிப்பும் அவளை முற்றிலும் களைப்படையச் செய்துவிட்டது.

அக்னியை மணிபத்ரபுரி, தற்பொழுது மனா என்றறியப்படும் இமயத்தின் மடிப்பிரதேசத்தில் இறக்கிவிட்டுவிட்டு சந்தோஷ மிகுதியில் குதூகலமாக ஆர்ப்பரித்து ஓடத்துவங்கினாள்.

---



ஒருபக்கம் அவள் குளிர் புனலாக ஆரவாரத்துடன் ஓட, இன்னொரு பக்கம், அக்னியைச் சுமந்து வந்த உடல் வெப்பத்தினால் ஆறாக பெருக்கெடுத்த மேனி வியர்வையும் இன்னொரு பக்கம் வெப்ப ஆறாக பெருக்கெடுத்து ஓடத்துவங்கியது.

தெற்குப்பக்கமாக குளிர் நீரராகவும், மேற்கு நோக்கி வெப்ப ஆறாகவும் அவை பிரவகித்தன. வியாச முனி, என்றுமில்லாதவகையில், மிகுந்த ஆரவாரத்துடன் புதிய நதியாக சரஸ்வதி பெருக்கெடுத்து ஓடுவதால், ஆஸ்ரம அமைதிக்கு இடையூறு ஏற்படுவதால், சரஸ்வதியை, அமைதியாக பூமிக்கு அடியில் பிரவகித்து ஓடுமாறு கேட்டுக்கொண்டார்.



சரஸ்வதியும் முனிச்ரேஷ்டரின் விருப்பத்தின்படி, பூமிக்கு அடியில் பாயத்துவங்கினாள் - தெற்கு வாக்கில் ஓடி, நீரூற்றாக யமுனையுடன் கலந்தாள். அந்தர்வாஹினியாக அங்கிருந்து, பிரயாகையில், கங்கையுடன் சங்கமிக்கும் வரையிலும், சரஸ்வதி, யமுனையுடன் இணைபிரியாமல் கலந்து, உறவாடி, பிரவாகித்து, கடக்கும் பூமியெல்லாம் செழிப்புற மேவி, கண்ணுக்குப் புலப்படாத மூன்றாம் கால் பின்னலாக இன்றுவரை ஜீவநதியாக இருந்துவருகிறாள்.

வெப்ப நதியாக பெருக்கெடுத்த அவளின் வியர்வை ராஜஸ்தான பாலைவனம் வரை பயணித்து பூமிக்கடியில் வெப்ப ஆறாகவே மறைந்தாள். கலிகாலத்தில் கூட, அந்த வெப்ப நதியைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

மேலே, சரஸ்வதி நதியின் இரு வேறு பரிமாணங்களை - மேற்கில் ஒரு கிளையாகவும், தென் கிழக்கே இன்னொரு கிளையாகவும் பரிணமிளித்த (இன்றளவும் மேலை சரஸ்வதியைப்பற்றிய எண்ணற்ற ஹேஷ்யங்கள் உண்டு - சான்றுகளும் பலவுண்டு) சரஸ்வதி நதியின் சீர்மைகளை கண்ணுற்றோம்.

பல்வேறு புராணங்களில் சரஸ்வதி நதி தேவியின் வரலாறு மிக சுவாரசியமாக சொல்லப்பட்டிருக்கின்றது.

## ப்ரயாக யாத்திரை

மஹாபாரத யுத்தம் முடிந்தபின்பு தர்மபுத்ரர் மார்க்கண்டேய மஹரிஷியை பார்த்து பல அக்ஷௌஹிணீ சைன்யங்களையும் துர்யோதனாதிகளையும் அழித்து விட்டோமே - அத்தகைய பாபத்திற்கு விமோசனம் எவ்விதம் ஏற்படுமென்று கேட்டார். அதற்கு மார்க்கண்டேயர் கூறுகிறார், யுத்தம் செய்வது க்ஷத்ரியர்களுக்கு தர்மம், அதிலும் பகவான் இருந்து நடத்தியது, ஆனாலும் மாயையின் குணங்களில் வசப்பட்ட ஜனங்கள் மோஹத்தினால் பாபம் செய்ய நேரிடுகிறது. எல்லாவித பாபங்களுக்கும் நிவர்த்தியைக் கொடுப்பது ப்ரயாக க்ஷேத்ரம்.

**ब्रह्मविष्णुशिवाद्यैश्व सुविचार्य दिविस्थितैः ।**

**मुनिभिर्निर्मलज्ञानैः निश्चित्य च सुगोपितम् ॥**

**तीर्थराजाभिगमनं सर्वाज्ञान निवारणम् ।**

**पदेपदेऽश्वमेधस्य फलदं यत् स्मृतं बुधैः ॥**

ப்³ரஹ்மவிஷ்ணுஶவாத்³யைஶவ ஸுவிசார்ய தி³விஸ்தி²தை: ।

முனிபி⁴ர்நிர்மலஜ்ஞானை: நிஶசித்ய ச ஸுகோ³பிதம் ॥

தீர்த²ராஜாபி⁴க³மனம்'...

த்ரிவேணிக் கரையில் பூஜை செய்யும் போது அந்தந்த தேவிகளுக்கு இந்த ப்ரார்த்தனைகளும் சொல்லலாம்.

த்ரிவேணி சங்கமத்தில் கங்கைக்கு பூஜை செய்யும்போது இந்த ஸ்லோகம் சொல்லலாம்.

விஷ்ணுபாதோத்பவே தேவி மாதவ ப்ரியதேவதே தர்சனே மம பாபம் மேதஹத்வக்நிரிவேந்தனம்.லோக த்ரயேபிதீர்த்தாணி யானி ஸந்தி சதேவதாஹா.தத் ஸ்வரூபாத்வமேதாஸி பாஹி ந ஹ பாப ஸங்கடாத்

கங்கேதேவி நமஸ்துப்யம் சிவசூடாவிராஜிதே சரணத்ராண ஸம்பன்னேத்ராஹி மாம் சரணாகதம்.

யமுநாவிற்கு பூஜை செய்யும் போது இந்த ஸ்லோகம் சொல்லலாம்.

இந்த்ரநீலோத்பலாகாரே பானுகன்யேயசஸ்வினி ஸர்வ
தேவஸ்துதேமாதஹ யமுநே த்வாம் நமாம்யஹம்

ஸர்வதீர்த்த க்ருதாவாஸே ஸர்வ காமவரப்ரதே ஸர்வ பாப
க்ருதத்வம்ஸேநமஸ்தே விஸ்வபூஜிதே.

ஸம்ஞ்ஞாகர்பஸமுத்பூதே ஸம்ஜ்ஞோசாரண புண்யதேவிஷ்ணு
ப்ரியதமே தேவி யமஜ்யேஷ்டேநமோ நமஹ.

ஸரஸ்வதி நதிக்கு பூஜை செய்யும்போது இதை சொல்லலாம்.

ப்ரஜாபதிமுக்கோத்பூதே ப்ரணதார்திப்ரபஞ்சினி ப்ரயாக
மிலிதேதேவி ஸரஸ்வதி நமோஸ்துதே

பத்மராகதலாபாஸே பத்மகர்ப அருணேக்ஷனேபத்மமாலா
வினிதாங்கே பாபக்ந்யைதே நமோநமஹ

வீணாவாதரஸாபிஞ்ஞே வீணயா ஸமலங்க்ருதேகீத வீணாரவே
மாதஹ பாஹிமாம்சரணாகதம்;

த்ரீவேணியில் பூஜிக்கும் போது சொல்லக்கூடிய ஸ்லோகம்

த்ரிவர்ணேத்ரியம்பிகே தேவி த்ரிவித அக-விநாசினி த்ரிமார்கே
த்ரிகுணே த்ராஹித்ரிவேணி சரணாகதம்;ஸம்சார அநலசந்தர்பம்
காம க்ரோதாதிவேஷ்டிதம் பதிதம் த்வத்பாதாப்ஜே மாம் சீதளம்
குருவேணிகே

தீர்த்தராஜே ப்ரயாகே அஸ்மின்ப்ரத்யக்ஷவாஸி ஜகத் ஹிதேநானா
ஜன்ம க்ருதா ப்யாஸாத்பாதகாத் உத்தரஸ்வ மாம்

அரசமரத்தின் வேர் அக்ஷயவடம் காணும் போது சொல்ல வேண்டிய
ஸ்லோகம்

ஜடரே அகிலமாதாய த்வயி ஸ்வபிதிமாதவஹ;க்ருத்வா
முகாம்புஜேபாதௌ நமோ அக்ஷயவடே நமஹ

த்வன்மீலேவஸதே ப்ருஹ்மா தவ மத்யே ஜநார்தனஹத்வதக்ரே
வஸதே சூலி தாத்ருசம்த்வாம் நமாம்யஹம்.

ஸௌவர்ணானிதலான்யஸ்ய ஸப்த பாதாலகா ஜடாஹா யாவன்
மண்டல விஸ்தாரோ வடராஜாயதே நமஹ.

## வேணிமாதவரை காணும் போது சொல்லவேண்டிய ஸ்லோகம்;



நீலஜிமூத ஸங்காச பீத கௌசேய பூஷிதப்ரயாக நிலய ஸ்வாமின் வேணிமாதவ தே நமஹ

சங்கசக்ர கதா பத்ம விபூஷித சதுர்புஜசதுர்வர்க பலாதார வேணி மாதவதே நமஹ; த்வத் பாத ப்ரணதம்மாம் த்வம் கமல ஸ்ரீ முகாத்ருசா உத்தரஸ்வ மஹோதாரவேணீமாதவ தே நமஹ.

## சனகாதி முனிவருக்கு ஆதிசேஷன் உரைத்த த்ரிவேணி தேவி ஸ்தோத்ரம் வ்யாஸர் அருளிச்செய்தது.

உடல் இந்திரியங்கள். ப்ராணன் மனது,புத்தி. சித்தம் அஹங்காரம் அஞ்ஞான துகள்கள் போன்ற அனைத்தையும் தனது ப்ரகாசத்தால் ப்ரகாசிக்க செய்யம் த்ரிவேணிதேவி எனக்கு ஸித்தி அளிப்பவளாகஇருக்கட்டும்.

ஜாக்ரத் ஸ்வப்ணம் சுஷுப்தி ஆகிய மூன்று நிலைகளிலும் ப்ரகாசிக்கசெய்பவளும் இவற்றின் விகாரங்களை மாற்றுபவளும் விகாரங்களைஅகற்றுபவளுமாக உபனிஷத்துகளால் போற்றப்படும் த்ரிவேணி தேவி எனக்கு ஸித்தி அளிக்கட்டும்.

ஸுஷுப்தி நிலையில் அறிவு அழியும்போதும்இந்திரியங்களின் ஆளும் சக்திகுறையும் போதும் கூட என்னை நடமாட வைக்கும் த்ரிவேணிதேவி எனக்கு ஸித்தி அளிப்பவளாகஇருக்கட்டும்

அனைத்து உலக விஷயங்களிலும் தினம் கட்டுண்டு கிடக்கும் எம்மோடுதாமே வந்து கலந்து அபரிமிதமானப்ரியம் செலுத்தி ஆதரிக்கும்ஸாக்ஷாத் திரிவேணி தேவி எனக்குஸித்தி அளிப்பவளாக இருக்கட்டும்.

மறைபொருளான விஞ்ஞானம் பரந்த ப்ரபஞ்சத்தின் பலவிதமான வேறுபாடுகளை ப்ரகாசபடுத்தி ஞானமளிக்கும் த்ரிவேணி தேவி எனக்கு ஸித்திஅளிக்கட்டும்.

**ஆரம்பத்தில் ப்ருஹ்மாவையும் மத்தியில் விஷ்ணுவையும் இறுதியில் சிவனையும் ப்ரகாசபடுத்தி காட்டும் திரிவேணி தேவி எனக்கு ஸித்தி அளிக்கட்டும்.**

.அகார வடிவில் ப்ருஹ்மா விசுவேதேவஸ்வரூபி;மகார வடிவில் அக்னி ஸ்வரூபி;என்றுதேஜஸ் ஸூத்ரம் சொல்வதை உணர்த்தும் த்ரிவேணி தேவி எனக்கு ஸித்தி அளிக்கட்டும்;

சிவபெருமானின் தேகத்திலிருந்து வேறுபடாதவளும் முக்தி தேவி ஸ்வரூபியும் அஞ்ஞானிகளுக்கு சூன்ய மானவளும் ஓங்கார லக்ஷ்மியுமான திரிவேணீதேவி எனக்கு ஸித்தி அளிக்கட்டும்

**இந்த துதியை தினமும் காலை,மதியம், மாலை சொல்பவர்களுக்கு திரிவேணிதேவி பிரசன்னமாகி அருள் புரிவாள் என்பதில் சந்தேகம் இல்லை;**

மந்திரஸாரமான இந்த ஸ்தோத்ரம் வ்யாஸ பகவான் செய்தது. இதை ஜபிப்பதால் திரிவேணி தேவி நம்மோடு எப்போதும் இருந்து காப்பாற்றுவாள்.

# சரஸ்வதி நதி வரலாறு

**கலைகளுக்கு அதிபதியாகத் திகழும் சரஸ்வதி பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்டவள். புத்திமான்களின் நாவில் வாழும்படி கூறிய பிரம்மா, அவளை நதிரூபமாகவும் விளங்குமாறு வரமருளினார். இதற்கு புராண வரலாறு ஒன்று கூறப்படுகிறது.**

தேவகுரு பிரகஸ்பதியின் மனைவி தாரையை சந்திரன் கவர்ந்துசெல்ல, இந்திராதி தேவர்களின் உதவியோடு பிரகஸ்பதி தாரையை மீட்டுவந்தார். தேவர்களுக்கு அஞ்சிய சந்திரன், அசுர குரு சுக்ராச்சாரியாரை சரணடைய, அதன் காரணமாக தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே போர் நடந்தது. போர் முடிந்தபின் தேவர்கள் ஹிமாலயத்தில் ததீசி முனிவரிடம் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, தேவைப்படும்போது அவற்றை வாங்கிக்கொள்வதாகக் கூறிச் சென்றனர். சில காலம் கடந்தது, தேவர்களின் ஆயுதம் தங்களிடம் இருப்பதை அசுரர்கள் அறிந்தால் தங்களுக்கு ஆபத்து வரலாம் என்று முனிவரின் மனைவி சொல்ல, முனிவர் ஆயுதங்களை

தண்ணீரில் கரைத்துக் குடித்துவிட்டார். பின்னர் இந்திரன் முனிவரிடம் ஆயுதங்களைக் கேட்டபோது, முனிவர் நடந்ததைக் கூறி அந்த ஆயுதங்களின் சக்தி தன் முதுகெலும்பில் இருப்பதாகவும், தன் முதுகெலும்பை எடுத்து அதில் ஆயுதம் செய்து பயன்படுத்திக்கொள்ளுமாறும் கூறினார்.

அதன்படி இந்திரன் அவரது முதுகெலும்பை எடுத்து வஜ்ராயுதம் செய்து, அதைக் கொண்டு தன்னைக் கொல்ல துவஷ்டாவால் ஏவப்பட்ட விருத்திராசுரனைக் கொன்றான். ததீசி முனிவரின் மகன் பிப்பலாதன் நடந்தவற்றை அறிந்து இந்திரன்மீது கோபம் கொண்டான். பத்ரியில் கடுந்தவமியற்றி தன் தொடையிலிருந்து வடவாக்னியை உருவாக்கி தேவர்களை நோக்கி வீசினான். அதன் உக்கிரகத்தைத் தாங்கமுடியாத தேவர்கள் விஷ்ணு பகவானை சரணடைந்தனர். பகவான் செய்த ஏற்பாட்டின்படி அக்னி சமுத்திரத்தில் விழ சம்மதித்தது. அக்னியை யார் தூக்கிச் சென்று கடலில் சேர்ப்பது என்ற கேள்வி எழுந்தது.

அக்னி தன்னை ஒரு கன்னிகைதான் தூக்கிச் செல்ல வேண்டும் என வேண்ட, பிரம்மா தன் படைப்பான சரஸ்வதியிடம், நீயே இந்த ஜ்வாலையைத் தாங்கக் கூடியவள். நீ நதி ரூபமெடுத்து இதனை ஏந்திச் சென்று சமுத்திரத்தில் விட்டுவிடு என்று கூறினார். அவளும் அதை ஏற்றுக்கொண்டு நதிரூபமெடுத்து அக்னியைத் தாங்கிச் சென்றாள். ஔர்வாங்காசிரமத்திலிருந்து கிளம்பி, ஆங்காங்கே மறைந்தும் வெளிப்பட்டும் அந்தர்வாகினியாக பிரபாசத்திற்குச் சென்றாள். (பிரபாசம் மேற்கு கடற்கரையில் சவுராஷ்டிரத்தில் உள்ளது). செல்லும் வழியில் தென்பட்ட கங்கையிடம் பிறிதொரு சமயம் கிழக்கே சந்திப்பதாகக் கூறிவிட்டு, உத்தங்க ஆசிரமத்தில் ஒரு ப்ளாக்ஷ மரத்தினருகே வெளிப்பட்டாள். அங்கு சிவபெருமான் தோன்றி, அவள் கையிலிருந்த வடவாக்னியை ஒரு பானையில் இட்டுத் தந்தார்.



சிவபெருமானின் ஆக்ஞைப்படி அக்னி சரஸ்வதியைச் சுடவில்லை. அவள் வடதிசையில் சென்று புஷ்கரத்தில் வெளிப்பட்டாள். அங்கிருந்து கிளம்பி நந்தா, குமாரிகா போன்ற வெவ்வேறு பெயர்களில் வெளிப்பட்டாள். அவ்வாறு அவள் பாய்ந்து பரவிய இடங்கள் புனித க்ஷேத்திரங்களாயின. அந்த க்ஷேத்திரங்களில் மக்கள் நீராடி தங்கள் பாவங்கள் நீங்கப்பெறுகின்றனர். சரஸ்வதி நதி சிவாலிக் குன்றுகளின் ஸிர்மு பகுதியில் ஒரு ப்ளாக்ஷ மரத்தடியில் தோன்றி பாய்ந்து வரும்போது, பல இடங்களில் மணலில் மறைந்தும் மறுபடி தோன்றியும் வெளிப்படுவாள்.

குருக்ஷேத்திரத்தில் பல ஏரிகளாகத் தோன்றுகிறாள். வடவாக்னியைச் சுமந்து சென்றதால் பாவிகளைப் பார்க்க விருப்பமில்லாமல் அடிக்கடி மறைந்து மறைந்து தோன்றுவதாகவும் சொல்லப்படுகிறது. கடைசியாக கச்சின் மணற்பிரதேசத்தில் மறைந்து மீண்டும் சவுராஷ்டத்தில் பிரபாசத்தில் தோன்றி சமுத்திரத்தை அடைகிறாள். சரஸ்வதி ஆங்காங்கே தோன்றிய இடங்களில் சமஸோ பேதா, சிவோத் பேதா, நாகோத் பேதா ஆகியவை முக்கியமானவை. பிரயாகையில் சரஸ்வதி அந்தர்வாகினியாக கங்கை, யமுனையுடன் கலந்து திரிவேணி சங்கமத்திற்கு மெருகூட்டுகிறாள்.

சரஸ்வதி நதியின் தீர்த்த மகிமை சொல்லில் அடங்காது. சரஸ்வதி நதிக்கரையில் அமர்ந்து தவமியற்றிய வியாசர், சுகரை புத்திரனாக அடையும் பேறுபெற்றார். ஆயிரக்கணக்கான முனிவர்களும் ரிஷிகளும் வித்யாதரர்களும் இந்நதிக்கரையில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு, இவளது தீர்த்தமாகிய அமிர்தத்தைப் பருகி கல்விக்கு மெருகேற்றியிருக்கின்றனர். இவளது அருளைப் பெற்றவர்களே மகாகவிகளாகவும் சிறந்த கல்விமான்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

## பிரயாகையில், அந்தர்வாஹினியான சரஸ்வதி நதியில் இவ்வருடத்திய புஷ்கர் நடைபெறுகிறது.

**अम्बितमे नदीतमे देवितमे सरस्वती अपरास्तस्य इव स्मासि प्रशस्तिम् अम्ब नास्कृतिम्**

ஓ சரஸ்வதி அன்னையே நீரே அன்னையர்களில் சிறந்தவர், நதிகளில் சிறந்தவர், தெய்வங்களில் சிறந்தவர். நாங்கள் தகுதியற்றவர்கள் என்றாலும், தயவுசெய்து எங்களுக்கு தங்கள் அருளையும், அங்கீகாரத்தையும் வழங்குங்கள்.
ரிக்வேதம். 2.41.16



## கோட்டீஷ்வர் மஹாதேவ் ஆலயம்

புராதன வேதமான ரிக் வேதத்தில் சரஸ்வதி நதி 60க்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறாள். சரஸ்வதி நதியின் தோற்றுவாய் 51 சக்தி பீடங்களில் ஒன்றான அம்பாஜி கோயிலுக்கு 8 கி.மீ தொலைவில், கோட்டீஸ்வர ஆலயத்திற்கு அருகே உள்ளது. சமோலி மாவட்டத்தில் மானா என்ற கிராமத்தில் பேரிரைச்சலுடன் வெளிப்படுகிறாள் சரஸ்வதி மாதா. இவ்விடத்திலிருந்துதான் பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியுடன் சுவர்க்கம் நோக்கி தம் இறுதிப்பயணத்தை மேற்கொண்டதாக ஐதீகம்.





வியாசர் இங்கேதான் அமர்ந்து மகாபாரதம் எழுதியதாகவும், இந்நதிக்கரையில் அமர்ந்து விநாயகரை துதித்து எழுதப்புகுங்கால், நதிப்ரவாகம் இரைச்சலுடன் இருப்பதால், அவளைத்துதித்து அமைதியாக பூமிக்கடியில் பயணிக்குமாறு வேண்டியதாகவும், அதனால் அவ்விடத்திலிருந்து அவள் பின்னர் பூமிக்கடியிலேயே பிரவாகித்து ஓடிக்கொண்டிருக்கிறாள் என்ற செவி வழிச்செய்தியும் உண்டு. கணேஷ் குஃபா என்னுமிடத்தில் வெளிப்பட்ட சரஸ்வதி நதி, இவ்விடத்தில் பூமிக்குள் மறைந்து, பின்னர் தென்கிழக்கில் கங்கையும், யமுனையும் சங்கமிக்கும் இடத்தில மூன்றாம் நதியாக அவ்வெள்ளத்தில் பிரவிகிக்கிறாள். எனவே அவ்விடம் திரிவேணி சங்கமம் என்றழைக்கப்படுகிறது.



இவ்விடத்தில் வியாச பகவான் தங்கியிருந்த வியாச குகையும் இருக்கிறது. இக்குகையில் விநாயகர், சுகர் மகரிஷி, மற்றும் வல்லபாச்சாரியார் மூர்த்திகள் இருக்கின்றன.




சிவனும், சதிதேவியும் திருமணம் முடித்து இந்நதி தீரத்திற்கு வந்து, நதி பூசனைகள் செய்வித்த பொழுது, சந்தோஷத்தில் சரஸ்வதி நதி பொங்கியதாகவும், சிவபிரான் தன் வலக்கால் பெருவிரலால் தொட்டு சமாதானப்படுத்தியதாகவும் புராணச்செய்தி உண்டு.



அவ்வமயம், அவர் சரஸ்வதியை அனுகிரஹித்து, அவள் கங்கையுடன் சங்கமிக்கும் இடம் 'தீர்த்த ராஜம்' என வழங்கப்படும் என்றும், அவ்விடத்தில் நீராடுவோருக்கு பாபவிமோசனம் கிட்டுமென்றும் வரமளித்தார்.

தேவர்கள் அருந்தும் அமிர்தத்தின் துளிகள் இத் திரிவேணி சங்கமத்தில் விழுந்ததால், நீராடுபவர்களின் சகல தோஷங்களும் நீங்கும் என்ற ஐதீகமும் உண்டு.

## புராணச் செய்திகள்:




1. வாமன புராணத்தில் சரஸ்வதி நதி பூமியிலிருந்து வெளிப்போந்தபோதில், பாலாக்ஷ மரத்தின் அடிவேர்ப்பகுதியிலிருந்து தோன்றியதாக கூறப்படுகிறது.

2. ரிக் வேதத்தில் சரஸ்வதி நதி ஸ்துதியால் போற்றப்படுகிறாள்.

3. பிரம்மா சரஸ்வதி தேவியைப் படைத்தபோதே இந்நதியையும் தன் கமண்டல நீர் கொண்டு படைத்தார்.

4. இந்திரன் இந்நதிக்கரையில் யாகம் செய்து, இழந்த பதவியை மீண்டும் பெற்றான்.



5. திரௌபதி, சுவர்க்கம் நோக்கி அவர்கள் ஏகும்போது, இந்நதியை கடக்க சிரமப்பட்டாளாம் - பீமன் பெரும்பாறை ஒன்றைக்கொணர்ந்து உதவி செய்தானாம். 'பீம்புல்' என்றழைக்கப்படும் அது இன்றும் காணக்கிடைக்கிறது.

6. குப்த காசியில், சரஸ்வதிக்கு குகைக்கோயில் இருக்கிறது.

7. தக்ஷப்ரஜாபதியின் குடும்பத்தினர் பூஜித்து வந்த நதி.

# சமீபத்திய புஷ்கர நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
|  | **நர்மதா நதி புஷ்கர்**<br>கடந்த 2024 ஆம் ஆண்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகதகுரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படி, ஓம்காரேஷ்வர், மத்திய பிரதேசத்தில் நர்மதை புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது |
|  | **கங்கா நதி புஷ்கர்**<br>கடந்த 2023 ஆம் ஆண்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகதகுரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படியும், ஆதீன கர்த்தர், மடாதிபதிகள் ஒத்துழைப்புடனும் புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது |
|  | **பிரம்மபுத்ரா நதி புஷ்கர்**<br>ஆச்சார்யாவின் கிருபையுடன் 2019 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23ஆம் தேதி முதன்முறையாக அஸ்ஸாமில் பிரம்மபுத்ர புஷ்கரவாஹினி கௌஹாத்தியில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. |
|  | **கிருஷ்ணா நதி புஷ்கர்**<br>2016 ஆம் ஆண்டு கிருஷ்ணாவிலும், நமது காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது |
|  | **காவிரி நதி புஷ்கர்**<br>ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகதகுரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படியும், அவர்கள் முன்னிலையிலும், ஆதீன கர்த்தர், மடாதிபதிகள் ஒத்துழைப்புடனும், அவர்கள் முன்னிலையிலும் காவேரி புஷ்கரம் காவிரி பாயும் எல்லா இடங்களிலும் கொண்டாடப்பட்டது. குறிப்பாக மயிலாடுதுறை, அல்லூர் போன்ற இடங்களில் வெகு சிறப்பாக நடந்தேறியது. |

# சரஸ்வதி நதி புஷ்கர் 2025 - திரிவேணி சங்கமம், ப்ரயாக்ராஜ், உத்திர பிரதேசம்



ஶ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள், ஆதீனகர்த்தாக்கள், மடாதிபதிகளின் ஆசிகளுடன், ஆளுநர், முதன் மந்திரி, அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர், அரசாங்க உயர் அதிகாரிகள் எல்லோருடைய மிகுந்த ஒத்துழைப்போடும் நடைபெறும் **இந்த சரஸ்வதி நதி புஷ்கர விழாவில்** பங்கு கொண்டு நதியில் நீராடி அவ்வமயம் நடைபெறும் பரிஹார ஹோமங்களில் கலந்து கொண்டு அனைத்து ஆன்மீக நிகழ்வுகளில் பங்கு பகவத் கிருபையையும், **சரஸ்வதி** மாதாவின் கிருபையையும், பரமாச்சார்யாள் ஆதி சங்கரரின் ஆசியையும், அருளையும் பெற்று, எல்லாம் வல்ல இறையின் கருணை கடாட்சத்திற்கும் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**தினமும் காலையில் சதுர் வேத பாராயணம், மகா ருத்ர ஜபம், சண்டி பாராயணம், காம்யார்த்த ஹோமங்கள் நடைபெறும். பிறகு கலச தீர்த்தங்கள் மதியம் 12:00 மணி அளவில் திரிவேணி சங்கமத்தில் சேர்க்கப்பட்டு புஷ்கர ஸ்நானம் நடைபெறும். மாலை நதி ஆர்த்தி, விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம், லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ருத்ர கிராம அர்ச்சனை, நடைபெறும்.**



| நாள் | தேவதை | தானங்கள் |
|---|---|---|
| மே 15 | மித்ரன் | தங்கம், வெள்ளி, தானியம், பூமி |
| மே 16 | அர்யமா | வஸ்திரம், உப்பு, பசு, ரத்தினம் |
| மே 17 | திவஸ்தா | வெல்லம், கறிகாய்கள், குதிரை, பழங்கள், வண்டி |
| மே 18 | சூரியன் | நெய், எண்ணை, தேன், பால் |
| மே 19 | விலஸ்வான் | தான்ய வண்டி, எருமை, காளை, ஹலம் |
| மே 20 | அருணா | மருந்து, கற்பூரம், கஸ்தூரி, சந்தனம், வாசனை திரவியம் |
| மே 21 | பகவான் | வீடு, பீடம், படுக்கை, நாற்காலி, கிழங்கு, இஞ்சி |
| மே 22 | அம்சுமான் | சந்தனக்கட்டை, புஷ்பம், முறம் |
| மே 23 | இந்திரன் | சிரார்த்த பிண்டம், கன்னி, சௌபாக்கியத்ரவ்யம், மஞ்சள், கங்கணம் |
| மே 24 | பர்ஜன்யன் | சாளக்கிராமம், புத்தகங்கள் |
| மே 25 | விஷ்ணு | யானை, குதிரை |
| மே 26 | ப்ரஹ்மா | எள், புத்தகங்கள் , பேனா, பென்சில் |



வேணி மாதவ் திவ்ய தம்பதிகள்



வேணி மாதவ் திருக்கோயில்

# ஆதி சங்கரர் விமான மண்டபம்
















## ஸரஸ்வதி நதி புஷ்கரம் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மே 14 | காலை 8 மணிக்கு மங்கள இசை, வேணி மாதவர், ஆஞ்சநேயர், ஆதி சங்கரர் சந்நிதிகளில் ஆஞ்ஞாவைப் பெறுதல்.<br>மாலை 5 மணிக்கு சப்தநதிகளை குடங்களில் ஆவாஹனம் செய்து சப்த நதி பூஜைசெய்து, புண்ணிய தீர்த்தத்துடன் யாகசாலை பூசை |
| மே 15 | காலை 6 மணிக்கு மங்கள இசை - துவஜகாரோணம் - ஸரஸ்வதி நதி புஷ்கர கொடியேற்றம் - கணபதி பூஜை<br>காலை 7 மணிக்கு திரிவேணி சங்கமத்தில கலச தீர்த்த சமர்ப்பணம், புஷ்கர ஸ்நானம்<br>காலை 9 மணிக்கு கணபதி ஹோமம் |
| மே 16 | தோஷம் விலக்கும் நவகிரஹ ஹோமம் |
| மே 17 | துர்கா ஸ்வரூப ஹோமம் , ஸ்வயம்வர காலா பார்வதி ஹோமம் - கல்யாணங்கள் கைகூட |
| மே 18 | ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண ஸ்ரீ பைரவ ஹோமம், வடுக பூஜா - வியாபாரம் செழிக்க |
| மே 19 | ஸ்ரீ மகா சுதர்ஷன ஹோமம் - திருஷ்டி அகல, , நோய்கள் விலக. |
| மே 20 | ஸ்ரீ சந்தன கோபாலகிருஷ்ண ஹோமம் - ஸ்ரீ புத்ர காமேஷ்டி யாகம் - ஸ்ரீ ஷண்முக ஹோமம் - புத்திர பாக்கியத்திற்கு |
| மே 21 | ஸ்ரீ ஹயக்ரீவ ஹோமம், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஹோமம், ஸ்ரீ வித்யா, மகா சரஸ்வதி ஹோமம் - கல்வி அபிவிருத்திக்கு. |
| மே 22 | ஸ்ரீ தன்வந்திரி ஹோமம் - வியாதிகள் நீங்கி குணமாக |
| மே 23 | ஸ்ரீ குபேர மஹாலக்ஷ்மி ஹோமம் - செல்வத்திற்கு |
| மே 24 | ஸ்ரீ சண்டி ஹோமம் லோக க்ஷேமத்திற்கும், ஸ்நேக சந்துஷ்டிக்கும் |
| மே 25 | ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம் அமிர்த ம்ருத்யுஞ்ய ஹோமம் லோக க்ஷேமத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும். |
| மே 26 | ஸ்ரீ ஆயுஷ்ய ஹோமம், நக்ஷத்திர ஹோமம் நீண்ட ஆயுளுக்கும், உடல் நலனுக்கும். |

பரிகார யாகங்கள், ஹோமங்கள்

**ஸ்ரீ சிதம்பரம் தியாகப்பா தீக்ஷிதர் (98426 94431),**

**ஸ்ரீ சிவராம தீக்ஷிதர் (9443320379)**

தலைமையில் நடைபெறும்.

திதி, ஸ்ரார்த்த சங்கல்பம், தில தர்ப்பணம் செய்தல், கௌரி, பிரகஸ்பதி, தம்பதி பூஜா:

**ஸ்ரீ ஸ்வாதிஷ் கனபாடிகள் (தமிழில்) 8072892359**

நிகழ்ச்சி நடைபெறும் இடம்

**Sri Madhwa Mutt Branch of Udupi Sri Palimaru Mutt**

**63, Mira Gali Daraganj**

**Prayagraj, UP**

**Land Mark – State Bank of India**

ஜோதிஷம்

**திருவை குமார், ஹைதராபாத் - 9959871561**

சிறப்பு நாதஸ்வரம்

திருவாடுதுறை ஆதீனம் ஆஸ்தான வித்துவான், நாதஸ்வர கலைச்செல்வன் **இலுப்பப்பட்டு ESS அரவிந்த் D.Music**

நாதஸ்வர இசை வேந்தன் **சிதம்பரம் R. ஐயப்பன்**

தவில் இசை நாதமணி **இலுப்பப்பட்டு ES சங்கர்**

தவில் இசை வேந்தன் **திருப்புண்கூர் V. சம்பத்**

**தினசரி திருமுறை பாராயணம்**

**காஞ்சிபுரம் கதிர்வேல் ஓதுவார் தலைமையில்**

| ஒவ்வொரு நாளும் விழா நிகழ்ச்சி நிரல் | |
|---|---|
| 7.00 am | நாதஸ்வர இசை |
| 8.00 am | மஹாந்யாஸ ருத்ர, வேத பாராயணம் |
| 10.00 am | யாகங்கள், ஹோமங்கள் |
| 11.00 am | பூர்ணாஹுதி |
| 11.30 am | மாதா ஸரஸ்வதி நதி தீர்த்தவாரி |
| 3.00 pm | நாதஸ்வரம் |
| 4.00 pm | திருமுறை பாராயணம் |
| 5.00 pm | ஸ்ரீமத் பாகவத ஸப்தாகம் (நாள் 1 - 7)<br>கலை நிகழ்ச்சிகள் (நாள் 8 - 11) |
| 7:30 pm | ஸரஸ்வதி நதி புஷ்கர ஆரத்தி |

## ஸ்ரீமத் பாகவத ஸப்தாகம்

## ஆங்கரை ரங்கசாமி பாகவதர்

| நாள் | பாராயணம் பகுதி |
|---|---|
| 1 | வியாச நாரத சம்வாதம்<br>குந்தீஸ்துதி பீஷ்மஸ்துதி |
| 2 | பரீக்ஷித் வைராக்யம் சுகாகமனம்<br>கபிலோபதேசம் |
| 3 | தக்ஷயக்ஞம் த்ருவ சரிதம்<br>பரதோபாக்யானம் |
| 4 | அஜமிளாளோபாக்யானம்<br>சித்ரகேது உபாக்யானம்<br>ப்ரஹ்லாத சரிதம் |

| | |
|---|---|
| 5 | கஜேந்திர மோக்ஷம்<br>வாமனவதாரம்<br>ஸ்ரீராமாவதாரம்,<br>ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் |
| 6 | ஸ்ரீ கிருஷ்ணா பாலா லீலா<br>ருக்மணி கல்யாணம் |
| 7 | பாகவத தர்மம்<br>அவதூத கீதை<br>யக்ஞ பூர்த்தி |

144 வருடத்திற்கு ஒரு முறை வரும் கும்ப மேளா "மஹா கும்பமேளா என்று அழைக்கப்படும் இது ஒரு வருடம் முழுவதும் கடைபிடிக்கப்படும். இந்த வருடம் மஹா கும்பமேளா வருடம். இந்த வருடத்தில் வரும் இந்த மிதுன ராசி, சரஸ்வதி நதி புஷ்கர் இவ்வகையில் மிகவும் முக்கியமானதும், புண்ணியமானதும் ஆகும். இந்த 12 நாட்களும் சங்கமத்தில் ஸ்நானம் செய்தால் புஷ்கர ஸ்நானம் மற்றும் மஹா கும்பமேளா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும்.

மேலான உங்கள் வருகையை அன்புடன் எதிர்பார்க்கும்

## விழாக் குழு

| | |
|---|---|
| முதன்மை அமைப்பாளர் | திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யன் – 9840053289<br>திரு VC சுப்ரமண்யன் – 99400 53289<br>ஸ்ரீ மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை |
| ஒருங்கிணைப்பு<br>சரஸ்வதி புஷ்கர் | K. K ஆச்சார்யா, பண்டரிப்பூர் (88876 51536) |
| வேதபாராயணம்<br>ஒருங்கிணைப்பு | திரு ஜே சந்திரமௌலி – 9940080033<br>ஆடிட்டர், சிவார்ப்பணம் டிரஸ்ட், சென்னை. |
| நிகழ்ச்சி நிரல் பொறுப்பு | திரு வலசை கே ஜெயராமன் – சென்னை – 9444279696<br>திரு. பட்டாபிராமன் - சென்னை – 9962019172<br>திருமதி சுதா சுந்தரவரதன் – பெங்களூரு – 9663879295 |